# பள்ளு இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் சடங்குமுறைகள்

முனைவர் கோ.மாரியம்மாள்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
ஈரோடு -12

39

**ஆய்வு நோக்கம்**

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான பள்ளு இலக்கியங்கள் காட்டும்வாழ்வியல் சிந்தனைகளையும் கலை பண்பாட்டு மரபுகளையும் அறிந்து கொள்ளுதல்.

**ஆய்வுச்சுருக்கம்**

பழங்கால மக்கள் மலைகளிலும்,காடுகளிலும் கூட்டமாக வாழ்ந்தனர்.இவர்கள் இயற்கையின் சீற்றத்தைக்கண்டு அஞ்சி தெய்வங்களையே துணையாகக் கொண்டு வாழத்தொடங்கினர். இம்மக்கள் அனைவரும் தாம் எடுத்துக்கொண்ட முயற்சியில் வெற்றி கிடைத்ததற்கு தெய்வ சக்தியே காரணம் என்று நம்பினர். எனவே தெய்வங்களுக்கு உயிர்பலிகொடுத்தும், படையலிட்டும், முளைப்பாரியிட்டும் வழிபட்டனர்..இவ்வழிபாட்டுமுறை பின்னர் வழிபாட்டு சடங்குகளாக மாறின என்றே கூறலாம். அவ்வகையில் பள்ளு இலக்கியங்களின் வாழ்வியல் பண்பாட்டு சடங்கு முறைகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தமிழ்நாட்டில் பதினாறாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மக்கள் மத்தியில் மிகச்சிறப்புற்றிருந்த ஒருவகைக் கூத்துக்கலை இலக்கியமாக பள்ளு இலக்கியம் விளங்குகிறது. தொண்ணூற்றாரு வகை பிரபந்தங்களுள் ஒன்றாகப் பள்ளு குறிப்பிடப்படுகிறது.

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்அறல்லாம்**
**தொழுதுண்டு பின் செல்பவர்"-குறள் -103**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க உழவுத்தொழிலே பிற எல்லாத்தொழிலைவிடவும் உயர்வான தொழிலாகும். உழவுத்தொழிலே பிறரை வாழ்விக்கும் தொழிலாகும். பிற தொழில்கள் எல்லாம் உழவுத்தொழிலைப் பின்பற்றி வாழக்கூடிய தொழிலாகும். மக்களின் வாழ்வியல் பண்பாடுகளையும், சிறப்புக்களையும், பழக்க வழக்கங்களையும் விளக்கி எழுந்த இலக்கியங்கள் அனைத்தும் அந்தந்த காலகட்டத்திற்குரிய மொழியமைப்போடு எழுந்த இலக்கியங்களாகும். இவ்வகையில் பதினாறாம் நூற்றாண்டு முதல் எழுந்த மக்கள் இலக்கியங்களில் பள்ளு இலக்கியங்களும் ஒருவகையாகும். அப்பள்ளு வேளாண் பண்பாடு கூறுகளுடன் அமைந்துள்ளது.

ஓவ்வொரு நிலத்திற்கேற்ப மக்களின் பழக்கவழக்கங்கள் மாறுபடுவது இயல்பு. அவ்வகையில் மருதநிலத்து மக்கள் பேசுகின்ற மொழி, நாகரிகம், இறைவன் மீதுள்ள நம்பிக்கை, இறைவழிபாடு, பிறப்பிலிருந்து இறப்பு வரை அவர்கள் செய்கின்ற சடங்குமுறைகளை வைத்து அவர்களின்

பண்பாட்டுமுறையினையும் அறியலாம்.

வேளாண்மையின் உயிர் மழையாகும். எனவே இம்மக்களிடம "மழைவழிபாடு" சங்ககாலம் தொட்டு இன்று வரை முக்கியமான இடத்தைப்பெறுகின்றது.; இம்மழைவழிபாட்டின் தொடர்ச்சியாக அமையபெற்றதே இந்திரவிழா. இந்திரவிழா இன்றளவும் மக்கள் மனதில் நிலைபெற்று கொண்டாடப்பெறுவற்கு முக்கிய காரணமாக விளங்குவது இவர்களின் வேளாண் பண்பாட்டு வாழ்க்கை மரபேயாகும்.

**திருமணச்சடங்கு முறைகள்**

சமூக வரலாற்றுக்கு அடித்தளமாக அமைகின்ற நிகழ்ச்சிகளுள் ஒன்றுதான் திருமணமாகும். சமூக மேம்பாட்டில திருமணம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. சுமூக அமைப்பில் ஒரு ஆணையும் பெண்ணையும் இணைத்துவைக்கும் பண்பாட்டு பாரம்பரியமிக்கது திருமணநிகழ்வாகும். புள்ளு இலக்கியங்கள் கூறும் திருமணமுறையில் பள்ளனார் மூத்த பள்ளியை உறவின் மூலம் மணப்பதையும், இளையபள்ளியை விருப்பப்பட்டு மணந்தசெய்தியும் இடம்பெறுகின்றது.

உறவுமுறைத் திருமணம்

**"அன்றிது நாள்வரைக்கும் நன்றெனவும் சம்பந்தம்**
**ஆடியே நல்லுறவு கூடியிருப்பார்"1**

மூத்தபள்ளியை உறவின் மூலம் மணந்த செய்தியை செங்கோட்டு பள்ளு குறிப்பிடுகின்றது.

**"எங்கள் தாய்வழியும்**
**தந்தை வழியும்**
**இந்தத் திருமலைப்பள்ளன்**
**வுந்தென்னை சரடு செய்தே "2**

திருமலை முருகன் பள்ளும் மூத்தபள்ளியை உறவின் மூலம் மணந்ததைக் குறிப்பிடுகின்றது. மேலும் திருவேட்டைஅய்யனார் பள்ளுவில் மாமி மகளை மணந்த செய்தியும், வையாபரிப்பள்ளுவில் உறவுப் பெண்ணை மணந்த செய்தியும் இடம்பெறுகின்றது. உறவமுறைத் திருமணம் என்பது பள்ளு இலக்கியங்களில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

**இளம்வயதில் திருமணம்**

பள்ளு இலக்கியங்களில் மூத்தபள்ளி,இளைய பள்ளி இருவரிடத்திலும் இளம்வயது திருமணம் இடம்பெறுகிறது. இளம் வயது பெண்களுக்கும், இளம்வயது ஆண்களுக்கும் திருமணம் நடந்த செய்தியை பள்ளு இலக்கியங்களில் காணமுடிகின்றது.

**"பள்ளா ஏழுவயதினிலே**
**உமக்கே மனைவாட்டியாக வந்தென்."3**
**"அன்றென்னையும் முரிமைப்பெண்**
**என்றஞ்சுவ யதினிலே**
**அருப்பம் வராதமுன்பு**
**மறித்துக் கொண்டான்"4**

மூத்த பள்ளி ஏழுவயதில் பள்ளனுக்கு மனைவியாக வந்த செய்தியை செங்கோட்டுப்பள்ளும், ஐந்து வயதில் மனைவியாக்கிக் மொண்டான் என்ற செய்தியை வையாபுரிப்பள்ளுவும் குறிப்பிடுகின்றது.

**பூண்டசெழுந்தேமல்முலை தீண்டனது ஆசை கொண்டு**

**பூக்குமுன்னே தாலிகட்டிச் சேர்க்கை பிரியான்"5**

ஒரு பெண் பூப்படையும் முன்பே திருமணம் செய்து வைக்கும் பழக்கம் இருந்துள்ளமையை திருவேட்டைநல்லூர் அய்யனார் பள்ளு எடுத்துரைக்கின்றது. ஆனால் சிற்றிலக்pயங்கள் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய சங்க மருவிய கால இலக்கியமான திரிகடுகத்தில் ஒரு பெண் பூப்படைந்தபின்னரே மணக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

மூத்த பள்ளி மாமன்மகள் என்ற உரிமையோடு மணம் முடித்ததையும்,இளைய பள்ளி அழகும் பெருமையும் கொண்டவள் மணமுடித்தான் என்பதையும் திருவேட்டை அய்யனார் பள்ள, செங்கோட்டுப்பள்ளு,வையாபுரிப்பள்ளு போன்ற பள்ளு நூல்களில் இளம்வயது திருமணமுறையைப்பற்றிக்கூறுகின்றது. இந்தியாவில் குழந்தைத்திருமணம் தடைசெய்யப்பட்டுள்ளன.ஆனால் பள்ளு இலக்கியங்களில் இளவயது திருமணமுறை இருந்ததை அறியமுடிகின்றது.

**பூப்புச்சடங்குமுறை**

பெண்கள் பூப்பெய்திய பதினோறாம் நாள் அல்லது பதினாறாம் நடத்தப்படும் சடங்கினை பூப்புச்சடங்கு என்கின்றனர். இப்பூப்பெய்திய செய்தியை வையாபுரிப்பள்ளு கூறுகிறது. பூப்பெய்திய நல்லசெய்தியைக் கூறிச் செல்கின்றவனுக்குப் பரிசுப்பொருட்கள் கொடுக்கின்றனர்.பெண்பிள்ளை பூப்படைந்த சடங்கைக் கொண்டாடும் செய்தி பள்ளு இலக்கியத்தில் காணப்படுகின்றது.

**"தோராயமென்னக் - கொழுந்தியாள்**

**மாராயஞ் சொன்ன – வண்ணான்**

**சுவந்திர மென்றே – அஞ்சுபொன்**

**சேவலைச் செங்கன்னைப்**

**பாராட்டிக் கொடுத்தான்"6**

பெண்பிள்ளை பூப்பெய்திய செய்தியைக் கூறிய வண்ணானுக்கு ஐந்து பொன்னும், சேவல் செங்கன்றைப் பரிசாகக் கொடுத்த செய்தியை வையாபரிப்பள்ளு குறிப்பிடுகின்றது. பூப்படைந் பெண்ணையே திருமணம் செய்ய வேண்டும் என்று சங்கம் மருவிய கால நூலான திரிகடுகமும் குறிப்பிடுகின்றது.

**குழந்தை பிறப்புச்சடங்கு**

ஒரு மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை உறவுமுறைகளோடு சடங்கு முறைகள் செய்யப்படுகின்றன. அச்சடங்குமுறை பள்ளு இலக்கியங்களிலும் இடம்பெறுகின்றன. மனிதர்களுக்கு முக்கியமான செல்வம் மக்கள் செல்வமாகும்.

இதனை திருவள்ளுவர்

**"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**

**மக்கள் பேறு அல்லபிற"7**

என்று மக்கள் செல்வம் பற்றிக்குறிப்பிடுகிறார்.

**காதுகுத்தல்**

உழவுத்தொழில் செய்து வாழும் மக்கள் தங்களின் குழந்தைகளுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை பல சடங்குமுறைகளைச் செய்கின்றனர். இவ்வாறு செய்யும் சடங்கு முறைகளில் குழந்தை பிறந்தவுடன் சில நாட்கள் கழித்து காதுகுத்தல் சடங்கு நடைபெறுகின்றது.

இதனை,

**"கொன்னுவேற் கண்ணி வள்ளி**

**யம்மையை முனம் வளர்த்த**

**குறவர் எங்கள் பாலர் காது**

**குத்தி வளர்ப்பார்" 8**

குழந்தைக்கு காது குத்தி வளர்க்கும் செய்தி கூறப்படுகிறது. காதுகுத்தும் நிகழ்வினை அனைத்து சமூக மக்களும் இன்றளவும் கடைபிடித்து வருகின்றனர்.

**முளைப்பாரி சடங்கு முறை**

கிராமங்களில் மழைவேண்டி நடத்தப்படும் அம்மன் வழிபாட்டில் முளைப்பாரி கும்மி குலவையிடுதல் போன்றவை இன்றும் கிராமங்களில் நடைபெறும் வழிபாட்டு சடங்குகளாகும். முளைப்பாரி சடங்குமுறையினை கண்ணுடையம்மன் பள்ளு நூலில் காணமுடிகிறது. "களியாட்டம்" என்னும் இச்சடங்குமுறையானது கண்ணுடையம்மன் நூலில் அம்மன் வழிபாட்டு சடங்குக்காக கருதி அம்மனை வழிபடுகின்றனர் இந்த வகையான அம்மன் வழிபாட்டு சடங்கிற்கென்று ஒரு புதிய வீட்டை உருவாக்கி அவ்வீட்டினுள் கண்ணுடையம்மையின் உருவத்தைச் சுவற்றில் வரைகின்றனா.அந்த உருவத்தின் முன் சிறு கலையங்களில் தானிய வகைகளைப் போட்டு நீர் ஊற்றி முளைப்பாரி வளர்த்து வருகின்றனர். நாள்தோறும் அம்முளைப்பாரியின் முன்பு கும்மியடித்து வருகின்றனர். என்பதை கண்ணுடையம்மன் பள்ளு குறிப்பிடுகின்றது.. மேலும் இச்சடங்கு முறையினை மற்ற பள்ளு நூல்கள் களியாட்டம் என்றும் அதனை மகிழ்ச்சியுடன் ஆடுவதாகவும் குறிப்பிடுகின்றது.சிறிய ஆட்டுக்குட்டியைப் பலிகொடுத்து கள்ளை உண்டு காளிதெய்வத்தின் களியாட்டம் ஆடும் செய்தியை திருமலைமுருகன் பள்ளுவின் மூலம் அறியலாம்.

மும்மாரி மழைபொழியவேண்டும், நோய்கள் வன்பிணிகள் மக்களிடம் அணுகாமல் இருக்கவேண்டும், நாட்டிலுள்ள மக்கள்,அடியவர்களஈகவிஞர்கள்,வேதியர்களும் செல்வச்செழிப்போடு வாழ வேண்டும் என்று கும்மியடிக்கின்றனர்.

**"தெம்முனை வேலவனைக் கொண்டாடிச்**

**சேர்ந்து கும்மியடிங்கடி"9**

என்று முருகனைக் கொண்டாடி கும்மியடிக்கும் செய்தியை திருமலைமுருகன் பள்ளின் மூலம் அறியமுடிகிறது.

**அறுவடையின் போது செய்யும் சடங்குமுறைகள்**

நெல் விளைந்து அறுவடையின் போது நாட்கதிர் அறுத்தல் என்று நல்ல கதிர்களை அறுத்து இறைவனுக்குப் படைத்து வழிபாடு செய்கின்றனர். நெல் மற்றும் பிற தானியங்களின் அறுவடையின் போதும் அம்அக்கள் பொங்கலிட்டு சேவல் அல்லது ஆடு பலியிட்டு வழிபாட செய்கின்றனர். "நாட் கதிர் அறுத்தல்" நல்ல நாள்பார்த்துதான் கதிர்களை அறுப்பர். இதனை வையாபுரிப்பள்ளு,

**"விளைந்தவுடன் பள்ளரெல்லாருங் கூடி**
**முழங்கிக் களிப்பேரி**
**வளைந்து மல்லாண்டப்பனுக்கு**
**இளந்தையாடு வெட்டி**
**பொங்கலிட்டு நாள்கதிருங் கொய்துமே" 10**

இங்கு குறிப்பிடும் அலகுக்கதிர் நெற்கதிரைக்குறிப்பிடுகின்றது. நேல் மற்றும் பிற தானியங்கள் நாட்கதிர் கொய்து அறைவனுக்குப் படைப்பதை இன்றும் இம்மக்களிடம் காணப்படுகின்றது.

**முடிவுரை**

ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை வேளாண்மைத் தொழிலுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் மருதநில மக்கள். வேளாண்மை செய்யும் போது சில சடங்க முறைகளைக் கடைப்பிடித்து வருகின்றனர்.அதுமட்டுமல்லாமல் திருமணச்சடங்கு, பிறப்புச் சடங்கு,காதுகுத்தல், முளைப்பாரிச்சடங்கு முறைபோன்ற சடங்கு முறைகளைச் செய்து தங்கள் மரபினைக் கடைபிடித்து வருகின்றனர் என்பதனை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

அடிக்குறிப்பு

1. .ந.கந்தசாமி (ப.ஆ)செங்கோட்டுப்பள்ளு பா-209
2. மு.அருணாசலம் (ப.ஆ)திருமலைமுருகன் பள்ளு பா-14
3. .ந.கந்தசாமி (ப.ஆ)செங்கோட்டுப்பள்ளு பா-126
4. பழனிச்சமீன் (ப.ஆ) வையாபுரிப்பள்ளு பா-12
5. ப.வே.நாகராசன் திருவேட்டை நல்லூர் அய்யனார் பள்ளு பா-18
6. பழனிச்சமீன் (ப.ஆ) வையாபுரிப்பள்ளு பா-117
7. மு.அருணாசலம் (ப.ஆ)திருமலைமுருகன் பள்ளு பா-13
8. மேலது பா-29
9. பழனிச்சமீன் (ப.ஆ) வையாபுரிப்பள்ளு பா-189

**துணைநூற்பட்டியல்**

1. ந.கந்தசாமி (ப.ஆ) செங்கோட்டுப்பள்ளு,
பழகு தமிழ் பதிப்பகம்,
மல்லசமுத்திரம். முதல் பதிப்பு-1967

2. மு.அருணாசலம் (ப.ஆ) திருமலைமுருகன் பள்ளு,
சுத்தி காரியாலயம், சென்னை.
முதல்பதிப்பு -1944

3. பழனி;ச்சமீன் (ப.ஆ) வையாபுரிப்பள்ளு,
ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமிதேவஸ்தானம்,
பழனி.

4. ப.வே.நாகராசன் திருவேட்டை நல்லூர் அய்யனார் பள்ளு,
சரசுவதி மஹரல் நூலகம்,தஞ்சாவூர்.
முதல் பதிப்பு-1992

5.ஞானசேகரன்.தே பள்ளு இலக்கியம் - மறுவாசிப்பு பிரதிக்கு வெளியே ........
முதல் பதிப்பு – 2006.